# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்

**நிலையறிபரீட்சை– 2021**

## வரலாறு–I

| பெயர் .:.சுட்டெண் :- ………………… | தரம் :- 10 | நேரம் :- 1மணித்தியாலம் |
|---|---|---|

**கவனிக்க :**
- **எல்லா**வினாக்களுக்கும் விடைதருக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ளவினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி(×) இடுக.

## வரலாறு - I

01. கி.பி 5ம் அல்லது 6ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டு சில பாகங்களைக் கொண்டதாக அமையும் இலங்கையின் வரலாற்றைக் கூறும் மிக முக்கியமான நூல்

(1) தாதுவம்சம் (2) மகாவம்சம் (3) போதிவம்சம் (4) ராஜாவலிய

02.நிகாய சங்கிரஹய, ராஜாவலிய ஆகிய சுதேச இலக்கிய மூலாதாரங்கள் எக்கால வரலாற்று பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள உதவுகின்றன.

(1) இராசரட்டைக்காலம் (2) கோட்டை முதல் கண்டி வரையான காலம்

(3) அனுராதபுரம் முதல் கம்பளை காலம் (4) கம்பளை முதல் கோட்டை வரையான காலம்

03. இலங்கையின் கலாசார வளர்ச்சியின் வரலாற்றைக் காட்டும் உயிரோட்டமான சாட்சிகளாக அமைபவை

(1) கல்வெட்டுக்கள் (2) நாணயங்கள் (3) சிதைவுகள் (4) செதுக்கல்கள், சித்திரங்கள்

04. தொல்லியல் அகழ்வாய்வுகள் மூலம் சீன, உரோம, அராபிய மற்றும் இந்திய நாணயங்கள் இலங்கையின் பல்வேறு இடங்களிலிருந்தும் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றின் மூலம் வெளிப்படும் மிக முக்கியமான விடயம்

(1) இலங்கையில் முன்னேற்றமடைந்த ஒரு பொருளாதார முறை காணப்பட்டமையாகும்.

(2) இலங்கையில் நாணயங்களின் புழக்கம் பிரபல்யமாக காணப்பட்டமையாகும்.

(3) இலங்கைக்கும் அந்நிய நாடுகளுக்கிடையில் முன்னேற்றகரமான வர்த்தகத் தொடர்புகள் காணப்பட்டமையாகும்.

(4) உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருக்கலாம் என்பதாகும்.

05. இலங்கையின் குறைவறள் வலய நிலத்தினடியில் களிமண்ணுடன் கூடிய மணல் மண்ணினால் மூடப்பட்டுள்ள சரளைப்படிவுகளுக்கு தொல்பொருளியலாளர்கள் வழங்கும் பெயர்

(1) இரணைமடுப் படிமம் (2) இரத்தினபுரிப் படிமம்

(3) அம்பாந்தோட்டைப் படிமம் (4) பாகியன்கலப் படிமம்

- பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு **06ஆம், 07ஆம்** வினாக்களுக்கு விடை தருக.

A மினிஹாகல்கந்த B புத்தல C கித்துள்கல பெலிலென

D பாகியன்கல E ஹொட்டன் சமவெளி F பதிராஜவெல

G பண்டாரவளை H பட்டதொம்பலென I சிகிரியா பொத்தான

06. கரையோர வெட்டவெளிப் பாசறைகளைக் குறிக்கும் எழுத்துக்களைக் கொண்ட விடைத்தொகுதி

(1) DEF (2) ABF (3) GEF (4) HIC

07. தாழநில ஈரவலயக் குகைகள் அமைந்திருந்த இடங்களைக் குறிக்கும் எழுத்துக்களைக் கொண்ட விடைத்தொகுதி

(1) ABC (2) DEF (3) DHC (4) HID

08. பண்டைய குடியிருப்புக்களின் பின்னணியில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணி

(1) இயற்கை வளங்கள் (2) இயற்கைத் தாவரங்கள்

(3) பயிர் நிலங்கள் (4) புவியியல் பின்னணி

09. நிரல் ‘அ’ வில் வரலாற்றுக்கால கிராமங்களும் நிரல் ‘ஆ’ வில் அங்கு வாழ்ந்த பல்வேறு தொழில் செய்யும் பிரிவினரும் தரப்பட்டுள்ளன. அவற்றைச் சரியாகத் தொடர்புபடுத்தினால் வரும் விடை

| நிரல் ‘அ’ | நிரல் ‘ஆ’ |
|---|---|
| 1 கசீகார காம | A குயவர்கள் வாழ்ந்த கிராமம் |
| 2 மணிகார காம | B இடையர் வாழ்ந்த கிராமம் |
| 3 கோபால காம | C விவசாயிகள் வாழ்ந்த கிராமம் |
| 4 கேவட்ட காம | D மீனவர் வாழ்ந்த கிராமம் |
| | E இரத்தினம் அகழ்வோர், பட்டை தீட்டுவோர் வாழ்ந்த கிராமம் |

(1) CEBD (2) CADE (3) DBEA (4) CEBA

10. தம்புள்ளைக்கு அருகில் உள்ள கண்டலம என்னும் பிரதேசத்தில் கொத்தல்கந்தையில் உள்ள கி.மு 250 ஆண்டிற்குரிய கல்வெட்டில் குகை ஒன்றை பிக்குகளுக்கு தானமளித்த பருமக எப்பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளார்.

    (1) குர்ஹுபதி (2) கமிக (3) தொட்டபோஜக (4) மாபுறுமுகா

11. ஏழைக் குடியானவன் ஒருவன் அடுத்த போகத்தில் நெல் தருவதாகக் கூறி கமிகவிடம் நெல் மூட்டை ஒன்றைப் பெற்றுக்கெள்ளல், இல்லத்தலைவர்களில் இருந்தே கமிக தெரிவு செய்யப்படல் என்னும் தகவலகள் இடம்பெறும் நூல்கள் **முறையே**

    (1) ஜாதக அட்டகதா, சமந்தபாசதிக (2) சத்தர்மலங்கார, சத்தர்மரத்னாவலிய

    (3) சமந்தபாசதிக, ஜாதக அட்டகதா (4) சத்தர்மரத்னாவலிய, சத்தர்மலங்கார

12. வெள்ளரசு மரக்கிளை நடும் வைபவத்திற்கு தேவநம்பியதீசனால் அழைக்கப்பட்ட பிரதேசத்தலைவர்கள் ஆட்சிசெய்த இடங்களாக அமைபவை

    (1) கதிர்காமம், கந்தரோடை (2) சந்தனகாமம், திஸ்ஸமகாராம

    (3) மாகம, கொடவாய (4) கதிர்காமம், சந்தனகாமம்

13. புராதன காலத்தில் ஆட்சி செய்த மன்னர்களின் பெயர்கள் சில ‘அ’ நிரலிலும் அவர்கள் சூடிக்கொண்ட பட்டங்கள் ‘ஆ’ நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பொருத்தினால் வரும் சரியான விடை

| ‘அ’ | ‘ஆ’ |
|---|---|
| 1 குட்டகண்ண அபயன் | A நரேஸ்வரன் |
| 2 மகாசேனன் | B குபேரக் கடவுள் |
| 3 1ம் காசியப்பன் | C காலிங்க சக்கரவர்த்திப் பெருமான் |
| 4 நிசங்கமல்லன் | D மின்னேரியாத் தெய்வம் |
| | E சக்கரவர்த்தி |

    (1) ACDE (2) BAED (3) ADBC (4) ACDB

14. தந்தைக்குப் பின் மகன் ஆட்சிக்கு வரும் முறைக்குப் **பொருத்தமில்லாத சோடியாக** அமைவது

    (1) பண்டுகாபயனின் பின் மூத்தசிவன் (2) தேவநம்பிய தீசனின் பின் உத்திய

    (3) மூத்தசிவனின் பின் தேவநம்பியதீசன் (4) வசபனின் பின் வங்கநாசிகதீச

15. முதலாம் விஜயபாகு பொலநறுவையைத் தலைநகராக்கியமைக்கான காரணமாக அமைவது

    (1) சோழர்களின் படையெடுப்பிற்கு அஞ்சியமை.

    (2) பொலநறுவை வளம்மிக்கதாகக் காணப்பட்டமை.

    (3) பொலநறுவையில் ஏராளமான யுத்த உபகரணங்கள் காணப்பட்டமை.

    (4) மேற்கை மையமாகக் கொண்டு செயற்பட்ட சர்வதேச வர்த்தகம் கிழக்கிற்கு மாறியமை.

16. இந்தியாவின் கிருஸ்ணா நதிப் பிரதேசத்தில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையை முன்னுதாரணமாகக் கொண்டு செயற்பட்ட இலங்கையின் ஆட்சியாளன்

(1) வசபன் (2) மகாசேனன் (3) முதலாம் பராக்கிரமபாகு (4) தாதுசேனன்

17. காசியப்பன் தந்தையான தாதுசேன மன்னனிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றக் காரணமாக இருந்த பட்டத்து இளவரசன்

(1) சூரதிஸ்ஸ (2)முகலன் (3) அசேல (4) உத்திய

18. சகல அரச கடமைகளையும் பதிவதற்கும் அவற்றைப் பாதுகாத்து வைப்பதற்கும் பொறுப்பான அரச செயலாளருக்கு வழங்கப்படும் பெயர்

(1) படகாரிக (2) பதகு (3) பனபெடிக (4) மஹலேகம்

19. அம்பாந்தோட்டையின் மண்டகல கல்வெட்டில் குறிப்பிடப்படும் "துலதர சுமண" என்பவர் மேற்கொண்ட தொழில்

(1) இரும்புக் கைத்தொழில் (2) வனைதல் கைத்தொழில்

(3) தங்கக் கைத்தொழில் (4) நெசவுக் கைத்தொழில்

20. ஹோபிடிகமுவ கல்வெட்டில் போயாதினங்களில் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் எவ் விகாரைக்கு விளக்கேற்றுவதற்கு எண்ணெய் தானமாக வழங்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

(1) மகியங்கனை விகாரை (2) அபயகிரி விகாரை

(3 கடலாதெனிய விகாரை (4) லங்காதிலக விகாரை

21. சர்வதேச வர்த்தகம் காரணமாக வளர்ச்சி பெற்ற நகரம் எது?

(1) அனுராதபுரம் (2) பொலநறுவை (3) காலி (4) அம்பாந்தோட்டை

22. ஒருவர் உருவத்தில், வாலிபத்தில் குணத்தில், ஞானத்தில் மேம்பட்டவராக இருந்தாலும் அவள் அல்லது அவனிடம் கலை பற்றிய அறிவு இல்லாவிடில் வாசமற்ற காட்டுப் பூவிற்கே ஒப்பாவர் எனக் கூறும் நூல்

(1) லோபோகார (2) சத்தர்மலங்கார (3) சத்தர்மரத்னாவலிய (4) ராஜாவலிய

23. இராசரட்டைக்காலத்தில் எழுதப்பட்ட சியபஸ்லகர, சசாந்தாவத்த, முவதே உதாவத்த என்னும் நூல்கள் எம்மொழியில் எழுதப்பட்டுள்ளன.

(1) பாளி மொழி (2) சிங்கள மொழி (3) சமஸ்கிருத மொழி (4) பிரகிருத மொழி

24. கி.பி 850 ஆம் ஆண்டில் நாடுகாண் பயணியாக இலங்கை வந்து சிவனொளிபாதமலையைத் தரிசித்தவர்

(1) சுலைமான் (2) மார்க்கோபோலோ (3) இபன்பதூதா (4) கொஸ்மஸ்

25 உலர் வலயத்தில் வாழ்ந்த புராதன கால மக்கள் எதிர்நோக்கிய பாரிய சவால்

(1) உற்பத்தியை அதிகரித்தல்

(2) பொருளாதாரத்தை முன்னேற்றுதல்

(3) வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்

(4) தினசரி வாழ்க்கைக்கும் விவசாயத்துக்கும் தேவையான நீரைச் சேகரித்தல்.

26. ஏழு மைல் நீளமானதும், 44 அடி உயரத்தைக் கொண்டதும், அரைவட்ட வில் வடிவான குளக்கட்டைக் கொண்டதுமான குளம்

(1) கலாவாவி (2) மின்னேரியா (3)யோதவாவி (4) குருளுவாவி

27. நீரை குளத்திலிருந்து திறந்து விடுவதற்கு மடைக்கதவுக்கு குறுக்காக கற்றூண் ஒன்று வைக்கப்பட்டு அதனை அசைப்பதன் மூலம் வெளியேறும் நீரின் அளவை மாற்றினர். இக்கற்றூண்களுக்கு வழங்கப்பட்ட பெயர்

(1) தண்ணீர் விளக்கு (2) ரஜமொஹால் (3) நீர்ச்சட்டம் (4) அளவுகோல்

28. கால்வாய் அமைப்பதற்குப் பொறுப்பான அதிகாரிக்கு வழங்கப்பட்ட பெயர்

(1) கபர (2) மஹவெதனா (3) அடிக (4) தடிக

29. புராதன காலத்தில் அமைக்கப்பட்ட மிகப் பிரமாண்டமான கால்வாயாக மகாவலிகங்கையின் கிளைநதியான அம்பன்கங்கையை மறித்துக் கட்டப்பட்ட கால்வாய்

(1) ஜெயகங்கை (2) அங்கமடில்லா (3) மினிப்பே (4) எலஹரா

30. உலர் வலயத்தில் நீரில் அமிலச்சுவையைக் கட்டுப்படுத்தவதற்காக அமைக்கப்பட்ட கிணறுகளுக்கு வழங்கப்பட்ட பெயர்

(1) ஊற்றுக் கிணறு (2) ஊராகொட கிணறு

(3) வராகொட கிணறு (4) ஆழ்துளைக்கிணறு

31. புராதன கால வைத்தியத்துறைக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஆதாரம் தொல்பொருளியலாளர்களால் 1982 இல் கண்டுபிடிக்கப்பட்ட இடம்

(1) ஆலஹனாபிரிவென (2) தீபத்துராமய பிரிவென

(3) செனவிய பிரிவென (4) பர்வத பிரிவென

32. புராதன காலத்தில் உள்நாட்டுப் சம்பிரதாயங்கள் பல இடம்பெற்றன. அவ்வகையில் சப்பிரகமுவப் பகுதியில் எத்தெய்வத்தை முன்னிலைப்படுத்தி மாடுகளின் பாதுகாப்புக்கும், விவசாய நடவடிக்கைகளின் வெற்றிக்கும் பூசைகள் நடைபெற்றன.

(1) கம்மாரதேவ (2) மங்கர (3) காளியம்மன் (4) வெசமுனி

- **பின்வரும் அட்டவணையை அவதானித்து 33ஆம், 34ஆம், 35ஆம் வினாக்களுக்கு விடை தருக..**

| | | |
|---|---|---|
| A 4ம் மகிந்தன் | D கொண்டவட்டவான் கல்வெட்டு | G உயர் நிலங்களில் மரங்களை வெட்ட வேண்டாம் |
| B 3ம் உதயன் | E அனுராதபுரக் கல்வெட்டு | H அரசினால் அமுல் செய்யப்பட்டுள்ள சட்டங்களை பின்பற்றல் |
| C 5ம் காசியப்பன் | F புத்தன்னேஹெல கல்வெட்டு | I காட்டு மரங்களை வெட்ட வேண்டாம் |

33. 4ம் மகிந்த மன்னனோடு தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கிய விடைத்தொகுதி

(1) EG (2) BI (3) CD (4) AD

34. புத்தன்னேஹெலக் கல்வெட்டுடன் தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கிய விடை

(1) EG (2) BI (3) CD (4) AD

35. அரசினால் அமுல் செய்யப்பட்டுள்ள சட்டங்களை பின்பற்றல் என்பதோடு தொடர்புடைய விடை

(1) EG (2) BI (3) CD (4) AD

36. நாட்டில் நிலவிய சட்டம், சட்டம் தொடர்பான நிறுவனங்கள் என்பவற்றைக் கல்வெட்டுக்களில் பொறிப்பித்த கி.பி 9ம் நூற்றாண்டில் வாழ்ந்த மன்னன்

(1) 2ம் சேனன் (2) 1ம் சேனன் (3) மானவர்மன் (3) 2ம் காசியப்பன்

37. சமுதாயத்தின் நீதியைப் பாதுகாக்க நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்களை மீறுவோருக்கு தண்டனை வழங்க அக்காலத்தில் நீதிமன்றங்கள் செயற்படுத்தப்பட்டன என்பதைவெளிப்படுத்தும் முதலாம் கஜபாகு மன்னனது கல்வெட்டாக அமைவது

(1) கொண்ட வட்டவான் கல்வெட்டு (2) சொரபொரவேவாக் கல்வெட்டு

(3) சங்கமுவிகாரைக் கல்வெட்டு (4) சித்துல்பவ்வ கல்வெட்டு

38. இலங்கையில் பல வெளிநாட்டு நாணங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அதிகாமான நாணயங்கள் எந்நாட்டுக்குரியவை

(1) கிரேக்கம் (2) உரோம் (3) பர்மா (4) அரேபியா

39. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மணிகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட கழுத்துச் சங்கிலி கி.மு 750 – 450 காலத்தைச் சேர்ந்த மயானமொன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. அம்மயானம் அமைந்துள்ள இடம்

(1) உடரஞ்சாமடம (2) ஹல்துமுல்ல (3) யட்டிகல்பொத்த (4) இப்பன்கட்டுவ

40. சாலியவின் மனைவி அசோகமாலா துட்டகைமுனுவின் மாளிகையில் சுவையான உணவு தயாரித்து அனைவரது மனதையும் கவர்ந்ததாகக் கூறும் நூல்

(1) ரஸவாகினி (2) தம்பியா அட்டுவா கெட்டபத

(3) சத்தர்மலங்கார (4) சகஸ்ஸ வத்துப்பகரண

(40 X 2 = 80 புள்ளிகள்)